பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

13 05 2025 **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் தங்கியுள்ள இடங்களை முற்றிலுமாக அழிக்கும் திறனை இந்திய ராணுவம் பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. அமெரிக்க தலைவர்கள் கடந்த பத்தாம் தேதி நடத்திய பேச்சுக்களின்போது பாகிஸ்தானுடன் புரிந்துணர்வு அடிப்படையில் சண்டை நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என இந்தியாவிடம் கேட்டுக்கொண்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
3. நாட்டின் எல்லைகோட்டுப்பகுதியில் ஊடுருவ முயன்ற மூன்று லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகளை, பாதுகாப்புப்படையினர் சுட்டுக்கொன்றனர்.
4. பஞ்சாப் மாநிலத்தில் விஷச்சாராயம் அருந்தி உயிரிழந்தோர் எண்ணிக்கை 21-ஆக அதிகரித்துள்ளது.
5. தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டி பாங்காக்கில் இன்று தொடங்கியது.

<u>இனி விரிவான செய்திகள்--</u>

<<<<<<>>>>>>

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் தங்கியுள்ள இடங்களை முற்றிலுமாக அழிக்கும் திறனை இந்திய ராணுவம் பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் ஆதம்பூர் விமானப்படை மையத்தில் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையில் சிறப்பாக பணியாற்றிய விமானப்படை வீரர்களை பாராட்டி பேசிய பிரதமர், தீவிரவாதிகள் தங்கியுள்ள இடங்களை முற்றிலுமாக அழிக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

தீவிரவாதிகள் பதுங்கியுள்ள இடங்களை துல்லியமாக தாக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த நடவடிக்கையின்போது தீவிரவாதிகளின் முகாம்கள் மட்டுமின்றி, அவர்களின் பயங்கரவாத தாக்குதல் திட்டங்களையும், அராஜகத்தையும் ஒழித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த சீரிய பணியை வீர தீரத்துடனும், மன வலிமையுடனும், தொழில் திறனுடனும் சிறப்பாக முடித்து நாட்டை பாதுகாத்த முப்படையினருக்கும் தமது நன்றியை தெரிவிப்பதாக பிரதமர் கூறினார்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் அந்நாட்டு ராணுவத்தை சார்ந்திருந்த போதிலும், அவர்களை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்திய வீரர்கள் முறியடித்ததாக தெரிவித்தார்.

நமது ராணுவத்தின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத பாகிஸ்தான்ராணுவமும், தீவிரவாதிகளும் நமது நாட்டின் அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகவும், இதனை சகித்துக்கொள்ள முடியாது என்றும் பிரதமர் கூறினார.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது 20 நிமிடங்களில் தீவிரவாதிகள் தங்கியிருந்த இலக்குகளை ராணுவம் முற்றிலுமாக அழித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

“பாரத் மாதாகி ஜே” என்ற முழக்கம் ஒவ்வொரு ராணுவ வீரரையும் நாட்டுக்காக தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துவதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அமெரிக்க தலைவர்கள் கடந்த பத்தாம் தேதி நடத்திய பேச்சுக்களின்போது பாகிஸ்தானுடன் புரிந்துணர்வு அடிப்படையில் சண்டை நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என இந்தியாவிடம் கேட்டுக்கொண்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக, அமெரிக்க தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின்போது இந்தியாவின் ராணுவ நடவடிக்கைகள் குறித்து மட்டுமே பேசப்பட்டதாகவும், வர்த்தகம் தொடர்பாக எந்தவொரு பேச்சுக்களும் இடம்பெறவில்லை என்றும் கூறினார்.

ஜம்மு காஷ்மீர் பிரச்சினைக்கு பாகிஸ்தான் உடனான இருதரப்பு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்ற கொள்கை முடிவில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக அவர் கூறினார்.

பாகிஸ்தான் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியிலிருந்து பாகிஸ்தானை வெளியேற்ற வேண்டும் என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் சோபியான் மாவட்டத்தில் எல்லைப்பகுதியில் ஊடுருவ முயன்ற மூன்று தீவிரவாதிகளை, பாதுகாப்புப்படையினர் சுட்டுக்கொன்றனர்.

காஷ்மீரின் காவல்துறை தலைமை இயக்குனர் திரு **V K Birdi**, ஆகாஷ்வாணி செய்திப்பிரிவுக்கு அளித்த பேட்டியில், இந்த தாக்குதலில் கொல்லப்பட்ட மூவரும் லஷ்கர் இ தொய்பா மற்றும் **‘The Resistance Front ’** அமைப்பை சேர்ந்தவர்கள் என்று தெரிவித்தார்.

இந்த மூவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த தீவிரவாதிகளிடமிருந்து ஏ கே-47 துப்பாக்கிகள் மற்றும் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டையை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<<>>>>>>

நாட்டின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள ஜம்மு, லே, ஜோத்பூர், அமிர்தசரஸ், பூச், ஜாம்நகர், சண்டிகர், ராஜ்கோட் விமான நிலையங்களிலிருந்து புறப்படும் விமானங்கள் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளன.

பயணிகள் பாதுகாப்பு கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அஸ்ஸாம் பஞ்சாயத்து தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி பெற்றுள்ள வெற்றி, பிரதமர் திரு நரேந்திர மோடி அரசின் மக்களை மையப்படுத்திய ஆட்சிக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை அளித்த அஸ்ஸாம் மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

மத்திய அரசின் திட்டங்களால் அஸ்ஸாமில் அமைதியும், செழுமையும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் முடிவுகள் குறித்து அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு நடத்தப்பட்ட தேர்தலில், 76 புள்ளி இரண்டு இரண்டு சதவீத வாக்குகளை தேசிய ஜனநாயக கூட்டணி பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

பாதுகாப்பு துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2013-14-ஆம் ஆண்டில் 2 லட்சத்து 53 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த பாதுகாப்புத்துறை பட்ஜெட் ஒதுக்கீடு, நடப்பாண்டில் ஆறு லட்சத்து 81 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பாதுகாப்பு உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பு, புதிய கண்டுபிடிப்புகள், உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் தன்னிறைவை எட்டுவது, பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி, நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதா வளர்ச்சி ஆகியவற்றில் பாதுகாப்பு அமைச்சகம் முனைப்போடு செயலாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி கடந்த பத்தாண்டுகளில் 34 மடங்கு அதிகரித்துள்ளதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

2013-14-ஆம் ஆண்டில் 686 கோடி ரூபாயாக இருந்த பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி, கடந்த நிதியாண்டில் 23 ஆயிரத்து 622 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இன்று வெளியான சிபிஎஸ்இ பத்து மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், மாணவர்களின் உறுதி, ஒழுக்கம் மற்றும் கடின உழைப்பை இந்த தேர்வு முடிவுகள் பிரதிபலித்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், உயர்கல்வி பயின்று நாட்டின் வருங்கால வளர்ச்சியில் தங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

பத்தாம் வகுப்பு தேர்வில் 23 லட்சத்து 71 ஆயிரம் பேரில் 93 புள்ளி ஆறு ஆறு சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாணவர்களைவிட மாணவியர் தேர்ச்சி சதவீதம் இரண்டு புள்ளி மூன்று ஏழு சதவீதம் கூடுதலாக உள்ளது.

சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு தேர்வு எழுதிய 16 லட்சத்து 92 ஆயிரத்து 794 மாணவர்களில் 88 புள்ளி மூன்று ஒன்பத சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

12-ஆம் வகுப்பு தேர்வு எழுதிய மூன்றாம் பாலினத்தவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றிருப்பதாக சிபிஎஸ்இ தேர்வு கட்டுப்பாட்டாளர் திரு சன்யம் பரத்வாஜ் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் விஷச்சாராயம் அருந்தி உயிரிழந்தோர் எண்ணிக்கை 21-ஆக அதிகரித்துள்ளது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை அம்மாநில முதலமைச்சர் திரு பகவந்த் மான் நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும் அவர் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

அவர்களது குடும்பத்தினரை சேர்ந்த ஒருவருக்கு வேலை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கள்ளச்சாராய புழக்கத்தை தடுக்க தவறிய காவல்துறை துணை கண்காணிப்பாளர், இரண்டு சுங்கவரி அதிகாரிகள் உட்பட மூன்று பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

பயங்கரவாதம் எந்த வடிவில் வந்தாலும் அதனை சகித்துக்கொள்ள மாட்டோம் என்ற உறுதிபாட்டை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் உலகிற்கு நாம் உறுதி செய்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பயங்கரவாதத்துக்கு எதிரான நாட்டின் நிலைப்பாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி, தெளிவாக எடுத்துரைத்திருப்பதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தாய்லாந்து ஓபன் பேட்மிட்டன் போட்டி பாங்காக்கில் இன்று தொடங்கியது.

இப்போட்டி வரும் 18-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதில் இந்தியாவின் ஸ்ரீகாந்த், லக்ஷ்யாசென், பிரியான்ஷு ரஜாவத், மால்விகா பன்சோத் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<<<END>>>>>>